www.tamilarangam.net


# செய்திக்கதிர்

தமிழீழத் தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வெளிவரும் பத்திரிகை

திங்கட்கிழமை 02.07.1990


## கிழக்கில் சிறீலங்காவின் நரவேட்டை தொடர்கின்றது

### 45 இளைஞர்களை வெட்டி ஆற்றில் போட்டனர்

26 யூன்

கிழக்கில் தமிழர்களைக் கொன்று குவித்து அப் பகுதியை சிங்களப் பிரதேசமாக்கும் சிறீலங்காவின் திட்டம் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றது. கிழக்குப் பகுதி மக்கள் தற்போது சிங்களப் படைகளின் மோசமான இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு பலியாகி வருகின்றனர்.

கடந்த வருடங்களில் ஜே.வி.பி யினரை ஒடுக்குவதாகக் கூறிக்கொண்டு சிங்கள மக்களைக் கொன்றதைப் போலவே தமிழீ மக்களைச் சுட்டுக் கொன்றுவிட்டு அவர்கள் மீது டயர் போட்டு கொழுத்திவிட்டுச் சென்றனர். அதிலும் குறிப்பாக முகப்பகுதி மட்டும் தீயிட்டுக் கருக்கப்பட்டுள்ளன.

சிங்களப் படையினர் கல்முனையில் 45 இளைஞர்களைப் பிடித்து சுட்டுக் கொன்றுவிட்டு உடல்களை ஆற்றில் வீசியுள்ளனர். இவ் உடல்களை விடுதலைப் புலிகள் மீட்டெடுத்துள்ளனர்.

### அநாதை இல்லங்கள் அகதிகள் முகாம்கள் ஆலயங்கள் மீது குண்டு வீச்சு

26 யூன்

சிறீலங்கா அரசு தனது படைகளைக் கொண்டு தமிழ் மக்களைக் கொன்று குவித்து வருகின்றது. திட்டமிடப்பட்ட ரீதியில் இப் படுகொலைகள் இடம்பெற்று வருகின்றன.

கிளிநொச்சியில் உள்ள கஸ்தூரி அனுதை இல்லம் மீது சிங்கள விமானப் படை விமானங்கள் நேபாம் குண்டுகளை வீசித் தாக்கியுள்ளன. இக் குண்டு வீச்சால் ஆறு பிள்ளைகள் படுகாயம் அடைந்துள்ளனர்.

நல்லூர் கந்தசாமி கோவில் பகுதியில் கெலிகொப்டர் தாக்குதல் இடம் பெற்றது. இதனல் சில பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர்.

26 ம் திகதியன்று யாழ் புனித சூசையப்பர் ஆலய முதியோர் இல்லம் விமான ரொக்கட் மோட்டார்களினுல் தாக்கப்பட்டது. அங்கு தங்கியிருந்த அகதிகள் சிலர் காயமடைந்துள்ளனர்.

### உடனடியாக 10 000 பேர் ஆட்சேர்ப்பு

28 யூன்

சிறீலங்கா அரசு தமிழர்கள் மேல் அடக்குமுறைகளைத் தொடரவென தனது படைகளைப் பலப்படுத்தி வருகின்றது. பெரும் தொகையான ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன. இத்தாலியில் இருந்து குண்டு வீச்சு விமானங்கள் சில வாங்கப்பட்டுள்ளன. புதிய வீரர்கள் பலர் இராணுவத்திற்கு சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும் கொழும்புச் செய்திகளின்படி சிங்கள மக்கள் தமிழ் மக்களிற்கு எதிரான போருக்காக பெரும் நிதி சேகரிப்புகளிலும் நிதி வழங்கல்களிலும் ஈடுபட்டுள்ளனர் என அறியப்படுகின்றது. பிரேமதாசா தனது ஒரு மாதகால ஊதியத்தை வழங்கி சிங்கள இனவாத நடவடிக்கைகளுக்கு வழிகாட்டினுர். சிங்களப் பாடசாலை மாணவ மாணவியரும் தமது ஒரு நேர உணவை ஒறுத்து தமிழ் மக்கள் மீதான இராணுவ அடக்குமுறையைப் பலப்படுத்த நிதி வழங்கியுள்ளனர். சிங்களக் கலைஞர்களும் கட்சி பேதங்களின்றி ஒன்றாக இணைந்து வீடு வீடாகச் சென்று நிதி சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

## யாழ் கோட்டை சுற்றிவளைப்பு தொடர்கின்றது

### கோட்டையை கைப்பற்ற முயற்சி

29 யூன்

யாழ் கோட்டை முகாமைச் சுற்றி வளைத்துள்ள விடுதலைப் புலிகள் தொடர்ந்து தாக்குதல்களை நடாத்திவருகின்றனர். கடந்த இரண்டு வாரங்களாகத் தொடரும் இம் முற்றுகையில் கோட்டை இராணுவ முகாமினுள் அகப்பட்டுள்ள சிங்கள இராணுவத்தினர் உணவு மருத்துவ வசதிகள் இன்றி அல்லல்படுகின்றனர். இத் துருப்பினருக்கு உதவவென சிறீலங்கா படைகள் சராமாரியான குண்டுவீச்சுத் தாக்குதலை மேற்கொண்டும் விடுதலைப் புலிகளின் முற்றுகையை உடைக்க முடியாத அரசு பொதுமக்களைத்தாக்கி வருகின்றது.

முகாமை சுற்றிவளைத்து விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளால் கெலிகொப்டர்களைத் தாக்கி கோட்டையை கைப்பற்றும் முயற்சியை புலிகள் தொடர்ந்து வருகின்றனர்.

### பெண்கள் கற்பழிப்பு

### இராணுவம் வெறியாட்டம்

மட்டக்களப்பு காரைதீவுப் பகுதியில் கடந்த 25 ம் திகதி 25 தமிழ்ப் பெண்கள் சிங்கள இராணுவத்தால் செய்யப்பட்டு முகாமிற்கு இழுத்து செல்லப்பட்டனர். இவர்களை மீட்கச் சென்ற கிறிஸதவ மதகுருமார் தாக்கப்பட்டு கலைக்கப்பட்டனர்.

கடந்த 26 ம் திகதி மட்டக்களப்பு கோமாரி முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் சுமார் 350 பொதுமக்களைப் பிடித்து தமது பாதுகாப்பிற்கான பணயப்பொருளாகப் பாவித்து அக்கரைப்பற்று முகாமிற்கு கொண்டு சென் போகும் வழியில் காஞ்சிராம் படைமுகாமில் கண்ணிவெடிகளை அக பணியில் அவர்களை ஈடுபடுத்தினர். போது ஒரு பொது கொல்லப்பட்டார்.இதனைத் தொடர்ந்து மீ கோமாரி முகாமிற்கு திரும்பி இராணுவத்தினர் வரும்வழியில் தாண்டியடி வைத்து 5 இளைஞர்களை சுட்டுக் கொன் மீதிப் பொதுமக்களை கோமாரி முகாமில் விடுதலை செய்தனர்.

## சிங்கள இராணுவத்தை எதிர்த்து புலிகள் வீரப்போர்

யாழ் கோட்டையைச் சுற்றிவளைத்து தாக்கு நடாத்திவரும் அதேவேளையில் போராளி பலாலி இராணுவ முகாமிலிருந்து வெளி முயன்ற இராணுவத்தினரை மீள முகாமி விரட்டியடித்துள்ளனர். மேலும் காங்கேசன்து காபவியூ துறைமுகத்தருகே நிறுத்தியி சிங்கள கடற்படைக்குச் சொந்தம கடற்படைக் கப்பலொன்று கடற்புலிகள தாக்கப்பட்டது. வெற்றிகரமான இத் தாக்குத அடுத்து மயிலிட்டி காங்கேசன்துறை மக் தாக்குதலில் ஈடுபட்ட போராளிகளை பெ ஆரவாரத்துடன் வரவேற்றனர்.

கடந்த 26.06.90 அன்று தமிழர்களின் நிலங்க அறுவடை செய்ய முயன்ற சிங்க காடையர்கள் மீதும் இராணுவம் மீதும் எ வீரர்கள் பலத்த தாக்குதலை மேற்கொண்ட பல இராணுவத்தினர் கொல்லப்பட்டது ஆயுதங்கள் பல கைப்பற்றப்பட்டன.

## சிறீலங்காப் படைக நேபாம் குண்டுக பாவித்தன

டெய்லி ரெலிகிராவ் நிருபர் கு சுமத்துகின்றார்.

யூன்

கடுமையான போர் இடம்பெறும் குடாநாட்டுப் பகுதிகளுக்கு விஜயம் கிறிஸ்தோபர் லொக்வூட் எனும் சிறீலங்கா அரசு எரியூட்டும் குண்டுகளை பாவித்துள்ளதாகவும் இவ் வீசப்பட்டு வெடிக்காமல் கிடந்த இவ்வா குண்டொன்றை தான் பார்த்ததாகவும் நேற் டெய்லி ரெலிகிராவ் பத்திரிகையில் வெளியிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் இதனைக் கூறிய போதிலும் சர்வதேச சமூகம் இ நம்பமறுத்தது. இப்போது டெய்லி ரெலிக இதனைக் கூறுவதால் விடுதலைப் புலிக செய்தி உறுதி செய்யப்படுகின்றது.

மேலும் சிறீலங்கா விமானப்படை விமான பொதுமக்கள் வாழும் பகுதிகளிலும் அக முகாம்களிலும் குண்டுகளை வீசியிருப் தான் கண்டதாகக் கூறிய அவர் வடபகு உணவு மருந்து எரிபொருள் போன்றவற் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகக் கூறினர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிறீலங்கா அரசின் போர்ப் பிரகடனம் எமக்கு வியப்பை அளிக்கவில்லை இது நாம் எதிர்பார்த்த ஒன்றே

நாம் சிறீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்தியதன் பயனாக எமது மண்ணை விட்டு இந்திய இராணுவம் விரைவாக வெளியேற சந்தர்ப்பம் உருவாக்கப்பட்டது. இதன் பயனாக இந்தியா எமது நண்பனாக எமது மக்கள் கொல்லப்படுவதை கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ளது. ஆனால் நாம் சிறீலங்காவுடன் பேச்சு வார்த்தைக்கு போகாதிருந்திருப்பின் இன்றும் இந்தியாவுடன் மோதிக்கொண்டிருக்க வேண்டியதாக இருந்திருக்கும். எமது அரசியல் நிறைந்த இந்த நடவடிக்கை எமக்கு இந்த வெற்றியைத்தான் தேடித்தந்தது.

இந்திய வெளியேற்றத்தின் பின்பும் எமது பேச்சுவார்த்தை தொடர்ந்தது. நாம் மாகாணசபைத் தேர்தலை சந்தித்து வெற்றி பெறுவதன் மூலம் தமிழ் மக்களின் ஏக பிரதிகள் நாம் என்பதை உலகிற்கு எடுத்துக்காட்டவும் கடந்த காலப் போர்களில் பொருளாதாரரீதியாகவும் உடலியல்ரீதியாகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமைதியான இடைவெளியை கொடுத்து அவர்களுடைய பாதிப்புக்களுக்கு நிவாரணம் செய்யப்படவேண்டும் என்பதற்காகவும் நாம் தேர்தலில் பங்குபற்றச் சம்மதித்தோம்.
கடந்தகால வரலாறுகளின்படி எமது தமிழ்த்தலைவர்கள் பலமுறை சிங்களத் தலைமைகளை பேச்சுவார்த்தைமூலம் ஒப்பந்தம் செய்து கொண்டதையும் ஆனால் மீண்டும் மீண்டும் ஆளும் வர்க்கம் எமது மக்களுக்கு துரோகமிழைத்ததையும் ஏமாற்றியதையும் நாம் மறந்துவிடவில்லை. எனவே தமிழ் மக்களுக்கு ஒரு நிரந்தரமான தீர்வு ஏற்பட்டு அவர்களுடைய பாதுகாப்புக்கு உறுதி அளிக்கப்படும்வரை தமிழர்களுக்கு பாதுகாப்பாக உள்ள ஆயுதங்களை கீழே போடமுடியாது என்பதை தெளிவுபடுத்தினோம்.

பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து உன்னிப்பாக அவதானித்து வந்தோம். நாம் சிங்கள இனவாத அரசால் 40 ஆண்டுகள் ஏமாற்றப்பட்டு வந்தபடியால் எமது சந்தேகம் நியாயமானது. நாம் சந்தேகித்தது போலவே சிறீலங்காவும் தன்னை இராணுவரீதியாக பலப்படுத்திக்கொண்டது.

1. சீனாவிலிருந்து பெருமளவு ஆயுதங்களை வாங்கிக் குவித்தது.
2. தனது இராணுவ அதிகாரிகளை பாகிஸ்தானுக்கு அனுப்பி பயிற்றுவித்தது.
3. இந்தியா இலங்கைக்கு வரும் போது 45 000 ஆக இருந்த சிறீலங்காப் படையினரின் எண்ணிக்கை 70 000 ஆக அதிகரித்தது.
4. இரண்டாயிரத்திற்குமதிகமான தொகையினரைக் கொண்ட பராகுட் அணியொன்றை உருவாக்கியது.
5. கிழக்குப் பகுதியில் பல புதிய இராணுவ முகாம்கள் உருவாக்கப்பட்டன
6. தமிழீழப் பகுதிகளில் ஐற்கும் அதிகமான பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்பட்டு சிங்களப் பொலிசார் ... அமர்த்தப்பட்டனர்.

7. தமிழீழத்தின் எல்லைப்புறங்களில் சிங்களப் குடியேற்றங்கள் புதிதாக அமைக்கப்பட்டது. அவர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டன.
8. புளொட் போன்ற துரோகக் கும்பல்களுக்கு இலங்கை இராணுவ முகாம்களில் பயிற்சி அளிக்கப்பட்டது.
9. சிறீலங்க விமானப்படை விமானங்கள் தமிழீழ பகுதிகளில் பறந்து வேவு பார்க்க தொடங்கின.
10. அதேபோல் அரசியல் ரீதியாகவும் உடனடியாக மாகாணசபையைக் கலைத்து புதிய தேர்தலை அறிவிக்கும் நடவடிக்கையை வேண்டும் என்றே காலதாமதம் செய்து கொண்டு சென்றது.

இப்படியாக பல ஆயுத்தங்களை சிறீலங்கா செய்துவந்ததை நாம் அவதானித்தோம். வெளிநாடுகளில் எமது செய்திகளினூடாக இதனை அவ்வப் போது வெளியிட்டு வந்திருக்கின்றோம். இப்போர் சிறீலங்கா அரசினால் திட்டமிட்டு ஆரம்பிக்கப்பட்ட ஒன்று என்பதை நன்கு அறிந்துகொள்ள முடியும்.

அம்பாறை மாவட்டத்தில் - மூஸ்லீம் மக்களை சிங்களவர்கள் தாக்கியதைத் தொடர்ந்து இம் மோதல் ஆரம்பித்தது. இம் மோதல் ஆரம்பித்த உடனேயே சிறீலங்கா அரசு பெருமளவு இராணுவத்தை அனுப்பியும் விமானங்களை பாவித்தும் போரைத் தொடங்கியது. போர் பிரகடனம் செய்தது. போர் என்றால் போர் என சவால்விட்டது.
இப் பிரச்சனை எமக்கு புதிதல்ல இலங்கை சுதந்திரமடைந்த பின் காலம்காலமாக நாம் ஏமாற்றப்பட்டுள்ளோம். கலவரம் என்ற பெயரில் கொல்லப்பட்டோம். சொந்த மண்ணைவிட்டு துரத்தப்பட்டோம். நாம் நாதியற்று நாய்களைப்போல் வெட்டுண்டுள்ளோம். அன்றைய எமது தலைமை எதிர்த்து நிற்கத்திரணியற்று நக்கிப்பிழைத்தது. இன்று வீறு கொண்ட எமது தமிழீழம் எதிர்த்து நிற்கின்றோம். தமிழர்களாகிய அனைவரும் இந்தப்போரில் கலந்து எமது உரிமைகளை மீட்டெடுப்போம்.

# தமிழர் தலைநகரில் தொடரும் அரச வெறியாட்டம்.

27 யூன்

திருமலை அகதிகள் தங்கியுள்ள தோப்பூர் பட்டிக்குடியிருப்பு அகதி முகாம்கள் மீது சிறீலங்கா விமானங்கள் குண்டுகளை வீசியுள்ளன. எனினும் மக்கள் ஏற்கனவே அங்கிருந்து அகற்றப்பட்டதால் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டது. இதே வேளையில் புல்மோட்டையில் இருந்து முல்லைத்தீவு நோக்கி வந்த 7 அகதிகள் சிறீலங்காப் படையினரால் கொல்லப்பட்டனர்.

திருமலை லிங்கநகர் என்னும் இடத்தில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான 50 வீடுகளையும் பாரிய தொழில் நிலையங்களையும் சிங்கள இராணுவம் சேதமாக்கியுள்ளது.

இதேவேளை திருமலையிலிருந்து முல்லைத் தீவு நோக்கி வந்த 1000 க்கும் மேற்பட்ட தமிழ் அகதிகளை கொக்கிளாய்ப் பகுதியில் இடைமறித்த சிங்களப் படையினர் ஆண்கள் அனைவரையும் கைது செய்ததுடன் பெண்கள் பலரை கற்பழித்தும் சித்திரவதை செய்தும் உள்ளனர். சில பெ...்கள் மீது சிகரட்டினல் சுட்டும் சித்திரவதை ...ள்ளனர்.

# யாழ்நகர் மீது குண்டு வீச்சு. நகரப்பகுதி எரியுண்டது

27 யூன்

கடந்த 25.06.90 அன்று யாழ்நகர் மீது சிங்... இனவாத இராணுவம் குண்டுகளை வீ... தாக்கியுள்ளது. யாழ் குடாநாட்டில் முகாம்கள்... முடக்கப்பட்டுள்ள சிங்கள இராணுவத்... காப்பாற்றுவதாகக் கூறிக்கொண்டு தமிழ் மக்க... குடியிருப்புகளை விமானப் படைக... குண்டுகளை வீசித் தாக்கின. இதன் போ... யாழ் நவீன சந்தையும் அதனைச் சூழவுள்... கடைகளும் எரியுண்டன. யாழ் வைத்தியசாலை... வீதியில் உள்ள பல கடைகள் எரியுண்டுள்ள... பேருந்து நிலையத்தின் ஒரு பகுதி பழை... மின்சார நிலையப் பக்கமாகபல கடைக... பேருந்து நிலையத்தின் எதிர்ப்புறமிரு... கடைகள் என்பன குண்டுவீச்சி... நாசமாகியுள்ளன.

சத்திரச் சந்தியிலிருந்து மனோகராத் தியேட்ட... சந்திவரை 16 கடைகள் எரியுண்டுள்ள... முட்டாசுக் கடைச் சந்தியில் 7 கடைகளும் 4 வீடுகளும் முளுமையாக சிங்கள படைகளி... கோரமான குண்டுவீச்சில் நாசமாகியுள்ள... மேலும் பரணி பார்மசி உட்பட நான்(... மருந்துக் கடைகள் குண்டு வீச்சி... சேதமாகியுள்ளன.

வண்ணார்பண்ணை கச்சேரியடி ஆகிய... இடங்களில் பல வீடுகள் குண்டுவீச்சி... பாதிப்படைந்துள்ளன.

யாழ் வேம்படி மகளீர் கல்லூரி யாழ் இந்... மகளீர் கல்லூரி யாழ் மத்திய கல்லூ... என்பவற்றின் கட்டிடங்கள் சி... சேதமடைந்துள்ளன.


தொலைபேசிச் செய்திச் சேவை

இலக்கம் 46 . 36 . 49 . 49

நூலகச் சேவை

வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில்
பி . பகல் 2 மணியில் இருந்து மாலை
8 மணி வரை நூலகம் இயங்கும்.
முகவரி

?41, RUE DES PYRENEES
75020 PARIS


# குடாநாட்டுச் செய்திகள்.

29 யூன்

கடந்த 27.06.90 அன்று கொக்குவில் பகுதி மீ... நடாத்தப்பட்ட கெலிகொப்டர் தாக்குதலி... வை.அலெக்சாண்டர் என்பவரும் அவரது குழந்தைகளும் உட்பட 7 பொதுமக்க... கொல்லப்பட்டனர். சுன்னகம் பகுதியில் ... வயதுடைய பொதுமகன் ஒருவர் கெலிகொப்ட... தாக்குதலுக்கு பலியானர். மேலும் சிறீலங்க... விமானங்கள் யாழ் பிரதான மின் விநியோ... உபகரணத்தை குண்டுவீசி... சேதப்படுத்தியுள்ளனர்.

கடந்த 26.06.90 அன்று கட்டப்பராயில் நடராச நாகபூசனி என்னும் ஏழாலை வாசி ஒருவ... கெலிகொப்டர் தாக்குதலுக்கு பலியானர். இதே... தினம் கொக்குவில் பகுதியில் வீசப்பட்ட நேபாம் குண்டு வெடித்து 3 ... கொல்லப்பட்டனர். 9 பேர் படுகாயமடைந்தனர்.

இந்திய வல்லாதிக்கம் விடுத்த சவாலை வெற்றி கொண்டு இன்று எமது விடுதலை இயக்கம் ஒரு புதிய வரலாற்றுத் திருப்பத்தில் நின்று கொண்டிருக்கிறது. மலைபோல மக்கள் சக்தி எமக்குப் பின்னால் இருக்கும் வரை எந்தப் புதிய சவாலையும் நாம் சந்திக்கத் தயார்.

தலைவர் வே. பிரபாகரன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# செய்திக்கதிர்

பிரான்சுக் கிளை

தமிழீழத் தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வெளிவரும் பத்திரிகை

12.10.1990


## கோட்டையில் கொல்லப்பட்ட இராணுவத்தின் சடலங்கள் ஒப்படைப்பு

தொடர்ச்சியான முற்றுகைக்கும் தாக்குதலிற்கும் பின் யாழ் கோட்டைமீது 25.10.190 அன்று நள்ளிரவு இறுதியான அதிரடித் தாக்குதலை புலிகள் நடாத்தியபோது தாக்குதலை சமாளிக்க முடியாது இராணுவத்தினர் தப்பி ஓட்டம்- பிடித்தது தெரிந்ததே. இதன் போது எமது வீரர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட 12 இராணுவத்தினரது சடலங்கள் பெற்றோர்களிடம் ஒப்படைப்பதற்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. 9.10.90 அன்று பி.பகல் 6.15 மணியளவில் பத்திரிகையாளர்கள் பொது மக்கள் மத்தியில் வைத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி திரு.பெட்நேட்டிடம் எமது போராளிகளால் இச் சடலங்கள் ஒப்படைக்கப்பட்டது.

இவ் சடலங்களை பொறுப்பேற்கும்படி விடுதலைப் புலிகள் பகிரங்க அறிக்கை மூலம் கொழும்பை கேட்டுக் கொண்டிருந்தனர். எனினும் சடலங்களை பொறுப்பேற்பதன் மூலம் 'கோட்டையை விட்டு வெற்றிகரமாக பின் வாங்கிய படைகள்' ஓட்டம் பிடித்த கதை சிங்கள மக்களுக்கும் உலகிற்கும் தெரியவரும் என்பதால் சிங்கள அரசு சடலங்களை ஏற்க தயக்கம் காட்டி வந்தது.

## ஊர்காவற்படை விரட்டியடிப்பு * * *

9.10.90 இன்று காலை எட்டு மணியளவில் திருமலை மாவட்டத்தில் கொறவப் பொத்தானைக்கும் சாந்திபுரத்திற்கும் இடையில் வைத்து சிங்கள ஊர்காவல்படை கும்பல் ஒன்று விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டது. இரு ஊர்காவல்படை குண்டர்கள் கொல்லப்பட்டதுடன் அவர்களிடமிருந்து 303 ரைபிள்கள் சொட்கன்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

10.10.98 அன்று காலை மட்டக்களப்பு மாவட்டத்தில் மொறக்கொட்டாஞ்சேனை, பகுதியில் சென்றியில் நின்ற இரு இராணுவத்தினர் எமது வீரர்களின் சினைப்பர் தாக்குதலுக்கு பலியாகினர்.

*சுதந்திர தமிழீழமே எமது அசைக்க முடியாத அரசியல் இலட்சியம்.*

## மன்னார் தாக்குதல் உயரதிகாரி கொல்லப்பட்டார்

மன்னார் வங்காலைப் பகுதியில் அப்பாவி மக்களது வீடுகளையும் சொத்துக்களையும் எரியூட்டியும் மக்களை அகதிகளாக்கியும் அப்பகுதி இராணுவம் தொல்லை கொடுத்து வந்தது. இதே பாணியில் நேற்று முன்தினம் 09.10.90 அன்று வங்காலை இராணுவ முகாமிலிருந்து வழக்கம் போல தமிழர்களது வீடுகளை சூறையாட சுட்டுக்கொல்லப் புறப்பட்ட இராணுவத்திரை முகாம் வாசலிலேயே எமது போராளிகள் எதிர்கொண்டு தாக்குதல் நடாத்தினர். இத்தாக்குதலின் போது 6 இராணுவக் கூலிகள் கொல்லப்பட்டனர். மிகுதி இராணுவத்தினர் பின்வாங்கி முகாமுக்குள் ஓடி விட்டனர். கொல்லப்பட்ட இராணுவத்தினரது சடலங்களை கைப்பற்றிய எமது போராளிகள் அவற்றை பொதுமக்கள் பார்வைக்குப் பின் எரியூட்டினர்.

# போர்முனையில் புலிகள்

## திருமலை தாக்குதல் * * * * * * * *

திருமலை மாவட்டத்தில சிங்கள படைகளுக்கு எதிரான புலிகளின் தாக்குதல்கள் மூர்க்கம் பெற்று வருகின்றன. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தமிழர் தலைநகரை சூறையாட துடித்து நிற்கும் சிங்களப் படைகள் மீதும் ஊர்காவல் படைப் பிரிவு மீதும் விடுதலைப் புலிகளின் அதிரடி படையணிகள் தாக்குதல் நடாத்தி வருகின்றன.

நேற்று முன்தினம் கடற்படையினரும் இராணுவத்தினரும் காட்டுப் பகுதிக்குள் விடுதலைப் புலிகளை தேடி அடியெடுத்து வைத்த போது புலிகளின் ஜொனி மிதி வெடிகளில் அகப்பட்டுக் கொண்டனர். இவ் தாக்குதலைத் தொடர்ந்து முகாமிற்குள் இராணுவ கடற்படை துருப்புக்கள் பின்வாங்க வைக்கப்பட்டன. ஒன்பதாம் திகதியன்று வேப்பங்குளம் பகுதியில் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடாத்தி அவர்களை வேப்பங்குளம் இராணுவ முகாம்வரை போராளிகள் விரட்டிச் சென்றனர். இத் தாக்குதலில் ஈடுபட்ட போராளி சங்கர் வீர மரணத்தைத் தழுவிக் கொண்டார். அவருக்கு எமது வீரவணக்கங்கள்.

## மிதி வெடி விதைப்பு * * * * * * *

01.10.90 அன்று ஊர்காவற்துறை கரம்பன் பகுதியில் குடிசன நடமாட்டம் உள்ள பிரதேசத்தில் சிங்கள பாசிக இராணுவத்தினர் 50 மிதிவெடிகளை விதைத்து விட்டுச் சென்றனர். இவற்றை விடுதலைப் புலிகளின் விசேட படைப்பிரிவு சென்று அப்புறப்படுத்தியது. மேலும் 121 கண்ணிவெடிகள் தம்பாட்டி பகுதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர்.அத்துடன் 6.10.90 அன்று ஊர்காவற்துறைப் பகுதியிலிருந்து 174 கண்ணி வெடிகளும் 7.10.90 அன்று 109 கண்ணிவெடிகளும் எமது படைப்பிரிவால் அகற்றப்பட்டது.

## மட்டக்களப்பில் அதிரடி * * * *

6.10.90 மட்டக்களப்பு சந்திவெளியில் விடுதலைப்புலிகள் வைத்த கண்ணிவெடியில் சிக்கி ஒரு இராணுவக் கூலி படுகாயமடைந்தார்.

7.10.90 மட்டக்களப்பு மாவட்டத்தில் செட்டிப்பாளையம் முகாமிலிருந்து களுவாஞ்சிக்குடி நோக்கி சென்ற இராணுவ ட்ரக்வண்டி எமது வீரர்களால் தாக்கப்பட்டது. 4 இராணுவகூலிகள் படுகாயமடைந்தனர்.

## மிதிவெடி தாக்குதல் * * * * * * *

01.10.90 அன்று அம்பாறை மாவட்டதில் சாகமம் எனுமிடத்தில் எமது போராளிகளின் மிதி வெடியில் சிக்கி இராணுவ வீரர் ஒருவர் கால்களை இழந்துள்ளார். 6.10.90 அன்று மட்டக்களப்பு கிரான்குளம் பகுதியில் மேலும் இராணுவத்தினர் எமது வீரர்களின் தாக்குதலினால் படுகாயமடைந்தனர்.

7.10.90 அன்று காலை 10.30 மணியளவில் மன்னார் மாவட்டத்தில் வங்காலை முகாமிலிருந்து தள்ளாடி முகாமிற்கு சென்று கொண்டிருந்த இரண்டு வாகனங்களின் மீது நடாத்தப்பட்ட தாக்குதலின் போது ஒரு வாகனம் சேதமாகியது. சேதவிபரம் தெரியவில்லை.

*எமது தாயகத்தை மீட்டு சுதந்திரத் தனியரசைப் பிரகடனப் படுத்தும்வரை நாம் தொடர்ந்து போராடியே தீருவோம்.*

**-தலைவர் வே. பிரபாகரன்.**

# இராணுவ வெறிக்குப் பலியாகும் அகதி முகாம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவம் கடந்த 20.6.90 21.6.90 ஆகிய திகதிகளில் வாழைச்சேனை கிரான் சித்தாண்டி சந்திவெளி வந்தாறுமூலை முறக்கொட்டாஞ்சேனை கொம்மாந்துறை செங்கலடி ஏறாவூர் போன்ற கிராமங்களிலிருந்த தமிழ் மக்களின் வீடுகள் அனைத்தும் கொள்ளையிடப்பட்டு தீயிடப்பட்டதினால் பொதுமக்கள் தங்குவதற்கு இடமின்றி அகதிகளாக வந்தாறுமூலை பல்கலைக்கழகத்திலும் வீடுகளிலும் ஆலயத்திலும் தங்கியிருந்தனர்.

வந்தாறுமூலை பல்கலைக்கழகத்தில் அகதிகள் பாதுகாப்புக்காக பெருந்தொகையில் வந்து குவிந்தனர். கட்டிட வசதியின்மையால் மக்கள் தாங்களாகவே தற்காலிக குடிசைகளையும் சேலைகளால் மறைத்துக் கட்டிக்கோண்டு மழையிலும் பனியிலும் தங்கியிருந்தனர்.

10021 குடும்பகளைச் சேர்ந்த 46038 பேர் பல்கலைக்கழக முகாமிலும் 4171 குடும்பங்களைச் சேர்ந்த 19121 பேர் சித்தாண்டி ஆலையத்திலும் தங்கியிருந்தனர்.

இவ்வளவு பெருந்தொகையிலான அகதிமுகாமை சரியான முறையில் பராமரிக்க எந்தப் பொது நிறுவனங்களும் முன்வராததால் சுகாதார வசதிகளோ மலசலகூட வசதிகளோ எதுவுமற்ற நிலையில் மக்கள் வாழ்ந்தனர். தொற்றுநோய்கள் பரவின வயிற்றோட்டத்தினல் 36 குழந்தைகள் உட்பட 40 பேர் பலியாகியுள்ளனர்.

உணவு விநியோகம் பெரும் சிக்கலான நிலையை அடைந்தது. அன்றாட

(மறுபக்கம் பார்க்க)

***** புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் *****

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பஸ மீது கெலி தாக்குதல்

வலவெட்டித்துறை சந்தியில் நின்ற பிரயாணி ...ண்டி ஒன்று சிறிலங்கா கெலிக்கொப்டரின் ...தலுக்கு இரையாகியது. மூன்று பொதுமக்கள் ...யமடைந்தனர்.

## மிதி வெடி கொடூரம்

மக்கள் குடிசனப் புழக்கம் உள்ள பகுதிகளில் ...டிகளை விதைத்து பொதுமக்களை ...யமடைய வைக்கும் இராணுவ கொடூரத்திற்கு ...கி 15வயது மாணவர் ஒருவர் மண்டைதீவில் ...ளை இழந்துள்ளார்.

## டயர் போட்டு எரிப்பு

மட்டக்களப்பு கருவேப்பங்கேணி எனுமிடத்தில் ...ழ் பொதுமக்களை சுட்டுக்கொன்ற சிறிலங்கா ...வர் அவர்களது உடல்களை டயர் போட்டு ...னர்.

## மோட்டார் தாக்குதல்

...த 5.10.90 அன்று காரைநகர் முகாமிலிருந்து ...படையினர் கருங்காலி பகுதி பஸ்டிப்போ ஆகிய ...துமக்கள் குடியிருப்புக்கள் மீது மோட்டார் ...களை ஏவினர். இதனால் இரு வீடுகள் ...ாகின

## ஊர்காவற்றுறை முகாம் பயங்கரவாதம்

5.10.90 காலை 7 மணியளவில் யாழ் ஊர்காவற்துறைப் பகுதியில் தம்பாட்டி எனுமிடத்தில் 25 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவரை ஊர்காவற்துறை முகாம் இராணுவத்தினர் பிடித்து சித்திரவதை செய்துவிட்டு கிணறு ஒன்றினுள் போட்டுவிட்டு சென்றுவிட்டனர். அவ்விளைஞர் பின்னர் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டு பொதுமக்கள் உதவியுடன் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளார். யாலை ஊர்காவற்துறை முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது சிலவீடுகள் சேதமடைந்தன.

6.10 .90 ஊர்காவற்துறை இராணுவத்தினர் மாரிஞ்சமுனை பகுதியில் 3 பொதுமக்களையும் செபஸடியர் கோவிலடியில் ஒருவரையுமாக 4 பொதுமக்களை பிடித்து சித்திரவதை. செய்துவிட்டு தெரு ஓரத்தில் குற்றுயிராக விட்டுவிட்டு சென்றுள்ளனர்.

## நான்கு பொதுமக்கள் சுட்டுக் கொலை

7.10.90 கலுவாஞ்சிக்குடி பகுதியில் 4 பொதுமக்களை இராணுவம் சுட்டுக்கொன்றது. பின்னர் தேத்தாத்தீவு களுதாவளை பகுதியில் 40 தமிழ் பொதுமக்களை சுற்றிவளைத்து கைது செய்துள்ளனர். கடுமையான சித்திரவதைக்குப் பின் இருவரை மட்டும் களுதாவளை முகாமிற்கு இழுத்து சென்றுள்ளனர். ஏனையோரை விடுதலை செய்துள்ளனர்.

# யாழ் மீது மீள குண்டு மழை

## சிங்கள அரச பயங்கரவாதம்

விடுதலைப் புலிகள்

# மக்கள் முன்னணி காரியாலயம் மீது தாக்குதல்

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ் மாவட்ட தலைமையைக் காரியாலயம் மீது 3 பொம்பர்கள் தாக்குதல்கள் நடாத்தியுள்ளன. இத் தாக்குதலின் போது அருகில் இருந்த 2 கடைகள் 3 வீடுகள் என்பன சேதமடைந்துள்ளன. நேற்றுக் காலை 10.15 மணியளவில் இத்தாக்குதல் நடாத்தப்பட்டது. மேலும் அருகில் உள்ள அரசடிப் பிள்ளையார் கோவிலடியில் வீசப்பட்ட குண்டு ஒன்று வீடொன்றில் வீழ்ந்து வெடித்ததில் பாக்கியம் என்ற பெண்மணி கொல்லப்பட்டார். ஒரு எட்டு மாதக் குழந்தை உட்பட 3 பேர் காயமடைந்துள்ளனர்.

# சாவகச்சேரி மீது கெலித் தாக்குதல்

### 3 பெண்கள் உட்பட 10பேர் உயிரிழப்பு

நேற்று முன்தினம் சாவகச்சேரி சந்தைப் பகுதியின் மீது சிறிலங்கா கெலிகாப்டர் ஒன்று செல் தாக்குதலும் துப்பாக்கிப் பிரயோகமும் நடாத்தியுள்ளது. இதன் போது ஸ்தலத்திலேயே 3 பெண் உட்பட 10 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் சந்தைப் பகுதியில் நின்ற 17 பேர் காயமடைந்துள்ளனர்.

கொல்லப்பட்டோர் விபரம் பின்வருமாறு :
சங்கத்தானையைச் சேர்ந்த செங்கைவேந்தன் கச்சாயைச் சேர்ந்த காந்தராசா சாவகச்சேரியைச் சேர்ந்த லட்சுமணன் சிறிரங்கன் ஆகியோரும் மீசாலையைச் சேர்ந்த முத்துப்பிள்ளை பஞ்சபாக்கியம் திருமதி.யோகேஸ்வரி ஆகியோரும் அடங்குவர்.

# புலிகளின் கோட்டை முகாம் மீது விமானப்படை தாக்குதல் முயற்சி

விடுதலைப் புலிகளின் முகாம் அமைந்துள்ள யாழ் கோட்டை மீது தாக்குதல் நடாத்தி தம்மால் இழக்கப்பட்ட கோட்டையை அழித்துவிட சிங்களப் படைகள் முயற்சி செய்து வருகின்றன. நேற்று முன்தினம் யாழ் கோட்டையை தாக்க சீன வை.12 ரக விமானங்கள் மூலம் அரச படைகள் முயன்றன. இத் தாக்குதலை எதிர்த்து கோட்டையில் நிலைவைக்கப்பட்டுள்ள விமான எதிர்ப்பு துப்பாக்கிகள் கொண்டு கோட்டை முகாம் போராளிகள் திருப்பித் தாக்கினர். பதில் தாக்குதல் காரணமாக உயரத்தில் இருந்தவாறு மூன்று குண்டுகளை மட்டும் வீசிவிட்டு விமானம் திரும்பிச் சென்றுவிட்டது.

# மட்டக்களப்பில் சிங்களக் குடியேற்ற முயற்சி

மட்டக்களப்பில் தமிழ் மக்களைக் கொன்று குவித்து இவர்களது குடியிருப்புகளை அழித்து வரும் அதே வேளையில் சிங்கபுர எனும் பகுதியில் சிங்களக் குடியேற்றவாசிகளை குடியேற்ற சிறீலங்கா இராணுவம் முயன்று வருகின்றது. கடந்த சில தினங்களாக அப் பகுதியில் காவலரண் அமைக்கப்பட்டு காவல் நிலைகள் பலப்படுத்தப்பட்ட பின் புல்டோசர்கள் போன்ற பாரிய இயந்திரங்கள் உதவியுடன் துரித கதியில் குடியேற்றத்திட்ட வேலைகள் இடம் பெற்று வந்தன. இவ் குடியேற்றத் திட்டத்தை தடுக்கும் முகமாக இப் பகுதி இராணுவ காவலரண் மீது பாரிய தாக்குதல்கள் எமது போராளிகளால் நடாத்தப்பட்டுள்ளன. இத் தாக்குதல் பற்றிய சேத விபரம் தெரியவில்லை.

## இராணுவ வெறிக்குப்..........

(முன்பக்க தொடர்சி)

சீவனத்துக்கே வழியில்லாது உயிரை கையில் பிடித்துக் கொண்டிரு... மக்களின் வாழ் நிலை மிகுந்... கடினத்திற்கு உள்ளானது. சிறீலங்... இராணுவம் கடந்த 3.9.90 அன்... பல்கலைக்கழக முகாமுக்குள் செ... தாக்குதல் நடாத்தியதால் புல்லுமலை... யைச் சேர்ந்த செல்வம் எனும் அ... கொல்லப்பட்டார். ஒருவர் காயம... துள்ளார். அகதி முகாமுக்குள் புலி... இருப்பதாக கூறி 141 அப்பா... மக்களை இராணுவத்தினர் கை... செய்தனர். இதில் 8 பே... வந்தாறுமூலையில் வைத்து ... போட்டு எரித்துவிட்டனர். கை... செய்யப்பட்டோரில் பலர் குடும்... த்தவர்கள். கைது செய்யப்பட்டவர்க... அனைவரும் பின்னர் கொல்லப்பட்... விட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களை முகா... க்குள் பார்க்கச் சென்றவர்களு... காணாமற் போய்விட்டனர்.

மீண்டும் 13.9.90 இல் சிங்க... இராணுவத்தினர் முகாமுக்குள் புகுந்... கண்மூடித்தனமாகச் சுட்டதில் ... பெண்களும் 5 குழந்தைகளு... அவ்விடத்திலேயே பலியாகினர். ... பெண் ஆபத்தான நிலையி... வைத்தியசாலைக்கு எடுத்... செல்லப்பட்டார்.

தொடர்ந்து 27.9.90 அன்று முகாமை... சுற்றிவளைத்து 16 பேரை கைது செய்... சென்றனர். 6 பேரிடம் ஆயுதங்களை... கையில் கொடுத்து புகைப்பட... எடுத்துவிட்டு அவ்விடத்திலே... சுட்டுக் கொன்றனர்.

இராணுவத்துக்கு இழப்பு ஏற்... போதெல்லாம் வந்தாறுமூலை பல்கலை... க்கழக முகாமை சுற்றிவளைத்... புலிகள் இருப்பதாகக் கூறி அப்பா... மக்களைக் கைது செய்து சுட்டு... கொன்றுள்ளனர்.

முகாம் பொறுப்பாளராக பல்கலைக்... விரிவுரையாளர் ஜெயசிங்கம் கட... யாற்றினர். இவ்வாறு சித்தா... முகாமினுள் கடந்த 11.8.90 இல் ... பேரை கைது செய்து சென்றன... இதுவரை அவர்களுக்கு என்... நடந்தது என்பது தெரியவில்... தங்கள் வீடுகளை பார்க்கச் செ... மக்களும் மர்மமாகக் காணா... போகின்றனர்.

இவ்வாறு ஒரு அடிமை முகா... வந்தாறுமூலை பல்கலைக்கழக முகா... திகழ்ந்தது. மக்களுக்கு பாதுகாப்பற்... சூழ்நிலையில் தினமும் சிறிலங்கா... இராணுவத்தால் கொல்லப்படுவதையு... காணாமற் போவதையும் இள... பெண்கள் பாலி... வன்முறைக்குள்ளாக்கப்படுவதையும் ...

உணர்ந்து விரக்தியுற்ற நிலையி... இருந்த மக்கள் தினமும் பலிகட... போன்று முகாமுக்குள் இருந்... கொல்லப்படுவதைத் தவிர்... பாதுகாப்பான இடங்களுக்கு... செல்லுமாறு எம்மா... அறிவுறுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து வந்தாறுமூ... பல்கலைக்கழக முகாமிலிரு... அகதிமக்கள் அனைவரும் முகா... விட்டு வெளியேறிச் சென்றுள்ளனர்.

தொலைபேசி செய்திச் சேவை இல 46 36 49 49
தொலைபேசி இல 43 58 11 42

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்